

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.2.2026) பேரறிஞர் அண்ணா அவர்களின் 57–வது நினைவு நாளையொட்டி சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.2.2026) பேரறிஞர் அண்ணா அவர்களின் 57–வது நினைவு நாளையொட்டி, சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டை அண்ணாதான் என்றென்றும் ஆள்கிறார்!

# அண்ணாவின் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு ‘Get Out’ தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!




**சென்னை, பிப். 5 -**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், “ஆண்டுகள் எத்தனை ஆனாலும் தமிழ்நாட்டை அண்ணாதான் ஆள்கிறார்” என்றும், “பா.ஜ.க. அரசின் ஆணவத்துக்கும் ஆதிக்கத்துக்கும் அண்ணாவின் தமிழ்நாட்டில் Get Out தான்” என்றும் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**பேரறிஞர் அண்ணா தமிழர்களின் மனசாட்சி!**

**நினைவுநாளில் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் அண்ணனை நினைக்கும் நாள்தான் எங்களுக்கு!**

**அண்ணா சாலை, அண்ணா சிலைகள், அண்ணா மேம்பாலம், அண்ணா நூலகம், அண்ணா பேருந்து நிலையங்கள் என அண்ணா பெயர்சூட்டிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அவரே நிறைந்திருக்கும்படி செய்தது கழக அரசு.**

**மொழித் திணிப்பு - பண்பாட்டுத் திணிப்பு - நிதி நெருக்கடி என்றெல்லாம் வஞ்சகங்களைச் செய்து கொண்டு, துரோகிகளையெல்லாம் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாலும், பா.ஜ.க. அரசின் ஆணவத்துக்கும் ஆதிக்கத்துக்கும் அண்ணாவின் தமிழ்நாட்டில் #GetOut தான்!**

**ஆண்டுகள் எத்தனை ஆனாலும், தமிழ்நாட்டை அண்ணாதான் ஆள்கிறார்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# வாய்ச்செலவு வழிப்போக்கன்!




“வடக்கு வாழ்கிறது தெற்குத்
தேய்கிறது” என்னும்
ஆதங்கத்தில் ஆவேசத்தில்
அன்று உதயமான திராவிட
இயக்கம் தான்
இன்று

வடக்கையும்
சேர்த்தே
வாழ்விக்கிறது
என்றால்
அதற்கு

திராவிடத்தின்
தலைமைப் பூகோளமான
தமிழகத்தில்
உருவான
பேரறிஞர் அண்ணா தொடங்கி
டாக்டர் கலைஞர் தொடர்ந்து

இன்று
தமிழ் மண்ணுக்கு காலமும்
கழகமும் கண்டெடுத்து
தந்திருக்கும்

மாண்புமிகு
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
வரை

அவர்கள்
ஆற்றிய
ஆற்றிவரும்
அயராத
அறிவார்ந்த
உழைப்பே
அதற்குத் தலையாய காரணம்
என்பதை
உலகமே அறியும்..

இதெல்லாம்

கண்முன்னே
தன்னைக்
காண வந்த
மக்கள்
கொத்துக்
கொத்தாக
செத்து
மடியும்போது

பாய்ந்தோடிச்
சென்று
பதுங்கிக்
கொண்ட
இதயமற்ற மனிதர்களுக்கு
எப்படிப் புரியும்..

ஆம்

கடமை ஆற்றுவோருக்கு
தலைமேல் சுமை..

வழிப்
போக்கனுக்கு
வாய்ச் செலவு
மட்டும் தானே..

**என்னநாஞ் சொல்றது!**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித்
தொடர்புக்குழு துணைத்
தலைவர்

கொலை செய்யப்பட்ட

# பீகார் மாநில தம்பதியர் - குழந்தை உடல்கள் சொந்த மாநிலம் கொண்டு செல்ல நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, பிப். 5-**

**கொலை செய்யப்பட்ட பீகார் மாநில தம்பதியர் மற்றும் குழந்தையின் உடல்களை சொந்த மாநிலத்திற்கு கொண்டுசெல்லவும் உறவினர்களிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

பீகார் மாநிலத்திலிருந்து வேலை தேடி சென்னைக்கு வந்த தம்பதியர் கவுரவ்குமார் அவரது மனைவி திருமதி புனிதாகுமாரி மற்றும் அவரது 2 வயது குழந்தை ஆகியோர் வடமாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்களால் கடந்த சில நாட்களுக்கு முன்பு கொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட 3 குற்றவாளிகள் சென்னை மாநகர காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட மூவரது உடல்களையும் அவர்களது சொந்த மாநிலத்திற்கு கொண்டு செல்ல உதவி தேவைப்படுகிறது என்ற செய்தியை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் எவ்வித கட்டணமுமின்றி, அவர்களது உடல்களை சொந்த மாநிலத்திற்கு கொண்டு சென்று உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

# ‘நமஸ்தே’ திட்டத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்வதில் தடுமாறும் ஒன்றிய அரசு!

## விளிம்புநிலை மக்களின் மீது அக்கறையுடன் செயல்பட வேண்டும் – மக்களவையில் கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!



*புதுடெல்லி, பிப்.5-*

*நாடு முழுக்க தூய்மை பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு கொண்டுவந்த ‘நமஸ்தே (NAMASTE)’ திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் தரப்பில், முழுமையற்ற புள்ளி விவர சேகரிப்பு கணக்குகளே பதிலாக கிடைத்துள்ளன. மிக அடிப்படையான புள்ளி விவரங்களுக்கே இந்த கதி என்ற நிலையில், திட்டத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதில் ஒன்றிய அரசின் தடுமாற்றம் வெளிப்படையாக தெரியவந்துள்ளது.*

*குப்பை சேகரிப்பாளர்களை உள்ளடக்காத முழுமையற்ற புள்ளி விவரம்:*

*ஐநா மற்றும் பல்வேறு தொழிலாளர் அமைப்புகளின் தரவுகளின் படி, இந்தியாவில் சுமார் 40 லட்சம் குப்பை சேகரிப்பாளர்கள் உள்ளனர். ஆனால், ஒன்றிய அரசு அளித்துள்ள புள்ளிவிவரங்களின் பட்டியலில் அவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.*

*இப்படி குப்பை சேகரிப்பாளர்களை தவிர்ப்பது தான் திட்டமெனில், எதற்காக அவர்களும் திட்டத்தில் உள்ளடக்கப்படுவார்கள் என்று திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்? இது உண்மையிலேயே அவர்களின் மீது அக்கறையோடு சேர்க்கப்பட்ட திருத்தமா, அல்லது உலக அமைப்புகளின் முன்னால் கணக்குக் காட்ட சொல்லப்பட்ட பொய்யா என்ற கேள்வியை தவிர்க்க முடியவில்லை.*

**நிதி குளறுபடியால் பாதிப்புக்குள்ளாகும் திட்டத்தின் இலக்குகள்:**

*நமஸ்தே திட்டத்தின் அடிப்படை இலக்குகள், நாடு முழுக்க தூய்மை பணியை 100% இயந்திரமயமாக்குவது (100% Mechanization), பூஜ்ய உயிரிழப்பை கொண்டு வருவது (Zero Fatality) மற்றும் அதில் ஈடுபடும் மக்களின் நலனைப் பேண மருத்துவக் காப்பீடு, பாதுகாப்பு உபகரணங்கள், முதலீடுகள் ஆகியவற்றை அளித்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது.*

*ஆனால், இந்த இலக்குகளை அடைய ஒன்றிய அரசு ஒதுக்கியிருப்பது இது வரை 350 கோடி என்ற சொற்ப நிதி மட்டுமே! இதை அனைத்துப் பயனாளர்களின் எண்ணிக்கைக்கும், ஒன்றிய அரசு அறிவித்த குப்பை சேகரிப்பாளர்கள் உட்பட, கணக்கிட்டால் ஒருவருக்கு தோராயமாக ரூ.850 மட்டுமே வருகிறது. இந்த குறைவான தொகையை வைத்து இலக்குகளை எட்டுவது எந்த காலத்திலும் சாத்தியமற்றது.*

*தூய்மை பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பாளர்கள் என்பவர்கள், சமுதாயத்தின் மிக விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் மக்கள். அவர்களுக்கான திட்டத்தில் மெத்தனத்திற்கும் குளறுபடிகளுக்கும் இடம் கொடுக்காமல், புள்ளிவிவரங்கள் முதற்கொண்டு அனைத்திலும் ஒன்றிய அரசு அக்கறையாக செயல்பட வேண்டும்!*

*இவ்வாறு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.*

# ஆவடியில் அண்ணா நினைவு நாள்!

திருவள்ளூர், பிப். 5 –

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆவடி காமராஜர் நகரில் அருகில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆவடி தொகுதி திருவேற்காட்டில் அமைந்துள்ள கருமாரியம்மன் திருக்கோவிலில் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு பொது சமபந்தி விருந்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, பகுதி செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன். விஜயன், கழக நிர்வாகிகள் அறங்காவல குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

